57

பிஸ்மில்லாஹி ஙிற்றஹ்மானிற்றஹீம்.

தீன்

திருப்பிரகாஸ திரட்டு

இஃது

தொண்டர்பாலர் வேதாந்ததேசிகர்

மஞ்சகுப்பம்

ஹக்கீம்

P. ஆதிமூலபிள்ளையவர்களால் பாடியதை

மௌலானா முருஷித்சையத்கரீம்

ஷாகிரீத்

சே. அ. முஹம்மத்அலிசாஹிப்

அவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

ஸ்ரீ கிருஷ்ணவிலாசம் பிரஸ்,
திருப்பாதிரிப்புலியூர்.

1920.

Q7:417
M20
144419

பிஸ்மில்லா ஹிர்றகுமானிர்றஹீம்.

ஆனந்தகளிப்பு

பல்லவம்.

அல்லாகு அல்லாகு அல்லா—சத்ய
அல்ஹம்து லில்லாகி அல்லாகு அல்லா

சரணங்கள்.

1 கலிமாவின் தொழுகையில்தேரு—நல்ல
காத்திழுலம்பியா நோன்பை நீ காரு
நலியாமல் ஸக்காத்தைப்பாரு—நீ
நலமதாய் ஹஜ்ஜுனிலானந்தங்கூரு அ

2 கலிமாவை யெப்போதும் போற்று—உண்மை
சாரணமறிந்து நீ கல்பதைத்தேற்று
அலிபெனும் வேதத்தில் சுற்று—உந்த
னஞ்ஞான குபிரையகற்றிஜூற்று அ

3 ஐந்தொகுத்து தனில்கூடி—அதி
லானந்தங்காணவே யன்புடன்பாடு

ஐந்தைவகுத்தோனை நாடு—உன்னி
லருமையாயிருந்திடுமகுழுதைபாடு

4 ஆதியைதொழுகுவாய்மனமே—உந்த
னறிவினையறிந்து முகம்மதை தினமே
ஜோதிமுகம்மது குணமே—அதில்
சுற்றுவாய் பற்றுவாய் நற்றுவாயனமே அ

5 கல்லைபக்கழுகவே வேணும்—உன்னின்
கையைக்கழுகும் போதுகலிமாவைபேணும்
அல்லாகு அக்பரையூணும்—அப்பேர
யருமறைமுஸ்தபா முகம்மது தோணும் அ

6 அன்னமுகம்மதை நாடு—கல்பே
யரும் வினைகள் போகுமாண் டோணின்வீடு
நன்னபிமொழிந்ததைபாடு—அதி
னம்பிக்கை யறியா மலிருந்தால் கேடு அ

7 ஆமந்துபில்லா வென்று சொல்லு—அது
அல்லாவொருவனென்றறிந்து நீ கொள்ளு
நேமமாய்குத்பீகிலையைபுல்லு—அது
நெடியவன்மறையென்று நிச்சயங்கொள்ளு அ

8 குறியாக யீமானை கொள்வாய்—கல்பே
குதாவினற்றாதலையனுதினஞ் சேர்வாய்

நெறியாக கல்பினுளறிவாய்—இது
நேமிகன் நபியின்வாக்கென்றுதெறிவாய்

9 பஞ்சாக்ஷரத்திலென்னைப்படைத்தீர் உமது
பரமரகசிய பொருளையும் வைத்தீர்
தஞ்சமென்றோர்க்கருள் தந்தீர்—உமது
தாசனபீபு முகம்மதையீந்தீர் அ

10 கவிமாலையெப்போது மோதுவோம்—நித்ய
காத்திமுலம்பியாவையனுதினந்தேடுவோம்
கலியாமல் தொழுகையில் நாடுவோம்—இன்ப
நாதன்றகுமானினருள்சேரயோடுவோம் அ

11 நம்பினோர்க்கானந்தபோதம்—சுத்த
நலமான மூச்சுடரில்தீபமைந்துபூதம்
கும்பித்தடக்கிபார்த்தால் நீதம்—பொல்லா
குபிர்தனைநீக்கினலவிப்பேகல்வேதம் அ

12 தீன்தீனென்று தினங்கூறு—கல்பே
தீனினிலெப்போதுங்கல்பதைசேரு
தீனினிலிஸ்லாமைப்பாரு—அந்த
தீனேமுகம்மது சுடரினில்தேரு அ

13 பொய்களைச்சொல்லி திரியாதே—உன்னின்
பொராமையினானுவத்தால் புகழ்ந்துகெடாதே
மெய்யோர்கள் வாக்கை தள்ளாதே—கல்பே
மேகக்குடையுடையோன் மேன்மை மறவாதே அ

14 ஐவர்கள் வணங்கிய தொழுகை—அது
ஐந்நேரத்துத்தொழபறுலானசெய்கை
தவத்தில் மிருந்தோர்கள் கொள்கை—இது
தானனிமானிடர்க்கு தனமதுயீகை அ

15 ஆதமிபுறூஹீமீசா—நபி
மூசாவும்யூனுசும் வணங்கியதொழுகை
ஆதரைதனிலவரவர்கள்—நானி
லவருமொவ்வோரோகத்தினில்தொழுதார் அ

16 ஆதம்நபியன்னார்நேரம்—நல்ல
அவ்வல்சுபுகதில்தான்தொழுதார்கள்
பேதமில்லாமலிபுறூஹீம்—சுத்த
பேரின்பளுகாத்தில் பிரியமாய் தொழுதார் அ

17 யூனுசுன்னபியஸரில்—நித
முண்மையாயீசாவும மகரிபில்தொழுதார்
பேணுமூசாநபியவர்கள்—ஆதி
பெரியவன்தன்னையே இஷாவினில் தொழுதார் அ

18 மானிடர்வணங்கவே கிருபை—நபி
வைத்தாரு நாளிலிருமூன்றுவேளை
அன்பாகத்தொழுகவே விதித்தார்—இந்த
அமலில்நடப்போர்நீள் மருமைதைச்சேர்வார் அ

19 மாரிருளமாவாசிநாளில்—மக்கம்
ககூபத்துல்லாவருகில் ஸபாமலைமீதில்

பெருஞ்ஜோதி சந்திரனையழைத்த—நபி
பெருமையையறிந்து மகிழ்வாய் நீகல்பில் அ

20 தசைகட்டிபெண்ணென தன்மை—இந்த
தாரணிலாரறிவாரவரது பெருமை
நேசமாய்கல்பினுள் திரமை—நீ
நேமத்துடனிருந்தால் போகுமேசிறுமை அ

21 கையைபொருந்தவைத்த நாதன்—நல்ல
காரியமறிந்தோர்க்குக்காரணபோதன்
வையகம் போற்றிடும் வேந்தன்—சுத்த
வானோர்கள்புகழ்ந்திடுஹக்கனின் தூதன் அ

22 வணக்கநெறியான துவேஷரீயத்—இதை
வணங்கியேயுனதுளமறிவதேதரீகத்
வணக்கமதயீமானல்லோஹகீகத்—சத்ய
வணக்கமாம்பொருமையிலிருப்பதே மாரீபத் அ

23 இல்லல்லாவென்பதினுளின்ஸான்—பிஸ்மில்
இறையவன் வேதமேயவிப்பினுளின்ஸான்
கல்பினுள் கலிமாவிலின்ஸான்—ராஜ
சாத்திமுலம்யியாவையடுத்தோனே இன்சான் அ

24 கலிமாவிலைந்துடன்கூடு—உயர்
சாமிலன்ஸர்வர் மவ்லூதைபாடு
ஹலீமாவின் மாதுலைநாடு—ஷம்ஸின்
அலிப்பினில்மூன்றுவக்ஷரந்தேடு அ

25 மிடிதனை யகற்றிடும் போதன்—சத்ய
மெஞ்ஞானமகுமூது முகம்மதே வேதன்
அடியவன்பிழைபொறுக்கும் நாதன்—எந்த
னஞ்ஞானம் நீக்குமருள் பிரசாதன் அ

பிஸ்மில்லாஹிர்றஹிமானிர்றஹீம்.

காப்பு.

1 ஆலநபியாகவந்துதித்த நாதா
யவனிதனில்தீன்பயிரைவிளைத்தபோதா
ஆலநபியாகவேகலிமாவோடு
அற்புதங்கள் செய்த திருஞானநீதா
ஆலநபிசற்குருவேயலிபின்வேதா
யகிலமெலாம்புகழ்பெற்றயபீடோயாதி
மூல்முதல்மூலமதாயிலங்குஞ்ஜோதி
முன்னிற்கமகுமூதுமக்கன்காப்பே.

விருத்தம்,

2 ஆதிதனைநிதந்தொழுது தவாவைகேட்டு
யனுதினமுமைந்துபுலனடக்கியாளு
நீதிபெறகலிமாவிலவிப்பைகண்டு
நிலைநிருத்தகல்பினுளின்ஸாளுகும்
மதிநிறைந்த மகுமூதரைச்சேராவிட்டால்
மானிடர்க்குயொருபோதுஞ் சுகமுமில்லை
ஜோதிவெளிமுச்சுடராமேராஜூதன்னில்
துலக்கமுள்ள யாகுதாயே ரக்ஷிப்பீரே.

3 பிந்ததுவே புள்ளியுமாய் நாதமாகி
பிறிவில்லாகுன் சப்தநாதமாகி
அந்தமுடனீரேழுலகக்கடலுமாகி
யளவில்லாசர்வஜீவதாபரங்களாகி
வந்தனங்கள் வணக்கநெறிதொழுகையாகி
வரம்பெருகும்ஷரியத்துமாரிபத்தாகி
சந்ததமும் நின்பெருமையிலாததுண்டோ
சர்வேசயாறப்பிலாலமீனே.

4 மரணமதையறிந்துய்யயறிவைத்தாரும்
மானிலத்தில் மயக்கருக்கும் அருளையீவீர்
காரணமதுநான்கதனையுணரச்செய்யும்
கரையில்லாநின்மகிமைகருதச்செய்யும்
பூரணமாயுமதுதாள்பணியச்செய்யும்
புத்தியினுள்ரகசியத்தைபோற்றச்செய்யும்
காரணமாயண்டரெண்டங்கலந்தஜோதி
கதிதருவீர்யாறப்பிலாலமீனே.

5 எண்டிசையும் புகழ்க்கொங்குத்தஸ்தகீரே
யெம்மறைக்கும் நாயகரின் பேரனாரே
மண்டலமும் விண்டலமும் துதிக்குமார்பா
மன்னரபுசாலிமகிழ்மைந்தனாரே
கண்டவர்கள் கண்டடக்கோட்டாலியாக
கணக்காக ஞானமதை யளித்தமாபு
தொண்டர்க்கருள்யீக பகுதாதுதன்னில்
தோன்றினீரெனையாளு முகியுத்தீனே.

6 விண்ணவர்களனுதினமுந் தொழுது போற்றும்
விஜயஜெயமருளுமருவிமலன் றன்னை
தன்னகமே சாக்ஷியாயறிந்து நோக்க
சற்குணத்தின்பாக்கியங்கள் தானுண்டாகும்
மண்ணுடனேயைந்து பொருளறிந்தாயானால்
மகாராஜன் வகுத்தருள்சப்தங்கேட்கும்
சொன்னமொழிதனில் கல்லைநிறுத்திபார்த்தால்
ஜோதியென்ற சற்குருவை காணலாமே.

7 அவிப்புவெனும் வேதமதையாய்ந்தறிந்து
யம்புவியியோரீடேரவருள் சுறந்து
நவிந்துஞ்சம்மாணவர்களறிந்து கொள்ள
நலம்பெருகுமோரெழுத்தை மூன்றதாக்கி
ஒளிபெருக நாற்படியாய் வகுத்தகௌஸே
உண்மையுள்ளோர் கல்புதனிலவிப்பைகாண
மெலிந்திறஞ்சுமெனை காப்பீர் ஞானகோவே
மெச்சுடரில் முச்சுடரா முகியத்தீனே.

8 எல்வுயிர்க்குந் தீபவொளியாயிலங்கு
மேகாந்தமுச்சுடராமிருக்குஞ்ஜோதி
தாவியெனையேன்படைத்துலகமீதில்
தத்தளிக்கச்செய்கின்ற யேனோ யேனோ
வாவியெனும் பெருங்கடலாம் புவியினுள்ளே
வல்வினைகள் சூழ்ந்திவன் மெலியுவேளை
தாவியிவன்பிழை பொருப்பீர் வேதநாதா
தற்பரத்தின் மசம்மதரையளித்தஹக்கே.

9 வாயிலாகுமென்ற திருநாமந்தன்னை
நலமாககல்புதனிலீமான்கொண்டு
தாயகமாயிருப்பதற்கு இல்லல்லாவை
தான்வணங்கி தொழுகைதனிலறிவைகண்டு
நேயமுடன் சற்குருவின்பாதந்தன்னை
நீதினைத்துயனுதினமுங் கசிந்துருகி
காயமதுவிழு முன்னேயமலன்றன்னை
கருத்துடனேமகுழுறைதகல்பில் நோக்கே.

10 அறிவறியாகுழந்தையை போலுளறிக்கொண்
டழுதழுதுயேக்கமுற்றயலைந்து கொந்து
குறியறியா வேடுவன்போல்சுற்றி சுற்றி
குணமில்லா மதியில்லா குருடனானேன்
நெறியறியா கசடனாய் திரிந்துடன்மேல்
வீஷ்ரேம் விளைவிக்கும் நெஞ்சனானேன்
அறிவறிய நின்கருணை யளிப்பீர்ஞான
அப்துல்லாமணமணியேயபீபேகாப்பீர்.

11 நோக்கியே கருத்ததனில் நோக்குப்போது
நானுக்கமென்றவறிவதனாலறிவைபோற்றி
பார்க்குள்ளே பலநினைவின்கேடுநீக்கி
பதமாகயீமானுள் கல்புனின்றால்
தூக்கியேகாத்திடுவாராண்டோன்றானும்
துரைராஜ தொழுகைதனில் நில்லு-நில்லு
வாக்கினிலேகல்பதுவுமொன்றாய்ச்சேர்த்தால்
வரமளிப்பார் மக்மூதும் ஹக்கன்றானே.

12 ஐயைந்துபறுலுதனை நடத்தவேண்டும்
அமலனுடபொற்பதத்தை வணங்கவேண்டும்
மெய்யனுடன் மெய்யனாயிருக்க வேண்டும்
மேதினியிலிச்சையில்லா பொறுமைவேண்டும்
வையவேபழிதொழில்கள் நீக்கவேண்டும்
பாபமதை போக்கவருள் கேட்கவேண்டும்
ஐய்யனாய் நடப்பதற்கு சத்யம் வேண்டும்
சத்தமுடன் ஸாஜாதுதனில்கல்பைநாட்டே.

13 ஊண்பணிகள் வேஷமதை இன்ஸானென்பா
ருள்ளமதையறியாமல் முஸ்லீமென்பார்
வான்பொருளையறிந்தோர்க ளின்ஸானாவார்
வள்ளல்ரசூல்தனை தெரிந்தோர் காமிலாவார்
கானகத்துமான்றனக்கு பிணையாய்நின்ற
காத்திமுலம்பியாவகல்பில் நொக்க
தேனென்ற தேனதிலு மதுரஞ்சிந்தும்
திகட்டாதமறைமொழியாம் நபியின்வாக்கே.

14 கானல்நீர்தனைகண்டு வோடுமான்போல்
கருத்திலாமல்பவநீரைக்கண்டுவோடும்
ஞானமில்லாமடையனாய் திரிந்தலைந்து
நாவரக்ஷிகொண்டுமே இயக்கமுற்று
கானகத்தில் திரிந்தோடுமிருகம்போல
கண்டபடியலையுமென்தன்பவங்கள்நீக்க
வானகத்தினுபுஸம்ஸம்நீரைதந்து
வரியேனையாண்டருள்வாயாகுதாயே.

15 என்னகத்துலென்னை இவன்காணவேணும்
எழில்பெருகுந்தர்மமதைச்செய்யவேணும்
பண்ணுமொழிகேடதனைவிலக்கவேணும்
பாதைநெறிபிசகாமல் நடக்கவேணும்
நன்மொழிகள் புகல்வோரைச்சேரவேணும்
நாலானவேதமதையறியவேணும்
தனக்குள்ளே தன்னைதான் பார்த்தோமானால்
தாரணியில் குறைகளில்லை இன்புறுவோம்.

16 பொய்சொல்லிதிரிவதினால் சுகமுமில்லை
பேராசைகொண்டதினால்பலனுமில்லை
பொய்சொல்லிபொருள்தேடி புதைக்கவேண்டாம்
பிரர்மனையிலிச்சைவைத்து புகழவேண்டாம்
பொய்சொல்லிவாழ்வதினால் கேடுகெட்டு
பொல்லாதசூழ்வினைகள் கொல்லும் கொல்லும்
மெய்யுடனே சேர்ந்தவற்கின்பங் காணும்
மேதாவிமுஸ்தபாவாக்கில் நில்லே.

17 குருவறியா மானிடர்க்கு சுகமுமில்லை
குணமறியா தோஷியர்க்கின்பமில்லை
மருள்பூண்டகாதகற்கு அறிவுமில்லை
மனந்தெளியா மூடர்கட்குபதேசமில்லை
திருவறியாயந்தகர்க்கு தொழுகையில்லை
திடமில்லாகாமுகர்க்கு வணக்கமில்லை
அருள்பூண்ட சற்குருவை சேர்ந்தோமானால்
அழிவில்லா பேரின்ப யருளுண்டாமே,

18 எள்ளிலெண்ணெயிருப்பது போல்பாரு பாரு
இன்பமுடன் கல்பனைதனைக்காரு காரு
தள்ளுமகங்காரமதை வீறு வீறு
துடிதுடிக்குங் கோபமதை நீறு நீறு
கள்ளத்தனங்கொண்டதெலாம் நீக்கு நீக்கு
கர்த்தன்குணங்குடிகொண்டு நோக்கு நோக்கு
முன்னெழும்புமுழையு முருகுமுன்னே
முஸ்தபாமகுமூதைப்போற்று போற்றே

19 வேதமொழி தவறாமலிருக்கவேணும்
விண்ணவனையனுதினமும் போற்றவேணும்
வாதுசெய்யுந்துர்மதியை யகற்றவேணும்
வரியவர்மேலனுதினமுமன்பு வேணும்
சூதுசெய்யுந்துரோகிகளை நீக்கவேணும்
சுத்தமில்லா வஞ்சகரை தள்ளவேணும்
எத்தர்கள் சொல்கேளாமலிருக்கவேணும்
யெழில்பெரியோன்பாதமதை வணங்குநெஞ்சே,

20 வணங்குதற்குயுனதுகல்பையறியவேணும்
மாராட்டபுத்தியைநீ யொதுக்கவேணும்
வணங்குதற்கெப்போதுஞ் சத்யம்வேணும்
மனதிலுள்ள கசடுகளை போக்கவேணும்
வணங்குதற்குகோளுரைகள் தள்ளவேணும்
வஞ்சகத்தின் பொறாமையெல்லாம் நீக்கவேணும்
வணங்குதற்குகாய்மகாரமகற்ற வேணும்
வல்லல்லாஹுத்தனை துதித்து வாழ்வாய் நெஞ்சே.

21 வாழ்வதற்குவல்லவனில்வாழ வேணும்
மறவாமல் தியானமதைச் செய்யவேணும்
பாழானயுனதுகல்பில் சுத்தம்வேணும்
பக்திநெறி தவறாமல் காக்கவேணும்
சூழ்வினைகள் போகவருள் தேடவேணும்
சுதந்திரத்தை தெரிந்துநீ யறியவேணும்
வல்லவனிலுன்கல்லை யுருவச்செய்தால
மாறாதசெல்வமதில் வாழ்வாய் நெஞ்சே